Regiestered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 13 (29 • 11 • 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 284

## பட்டதாரிகளுக்கு தொழில் நெறிப்படுத்தல் பயிற்சி

பட்டதாரிகளுக்கு தொழில் நெறிப்படுத்தல் பயிற்சியை வழங்குவதன் மூலம் எண்ணாயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வசதியினை அமைத்துக்கொடுக்க முடியுமெனக் கொள்கைத்திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது. கல்வி, உயர் கல்வி அமைச்சு, தொழில் பயிற்சி அமைச்சு, இளைஞர் விவகாரங்களுக்கான அமைச்சு என்பன இந்தப் பயிற்சி நெறிக்கு ஒத்துழைப்பு வழங்குமெனவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தப் பயிற்சிக் காலத்தின் (4 ஆம் பக்கம் பார்க்க)

### மாமடுவில் சம்பவம்

# புலிகளின் மின்னல் தாக்குதல்

# அரண்கள் அழிப்பு: 10 படை பலி

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியா-மாமடு சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மின்னல் தாக்குதல் ஒன்றை நேற்று முன்தினம் இரவு நடத்தினர். இத்தாக்குதலின் போது மூன்று காவலரண்கள் அழிக்கப்பட்டன. பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதல் நடந்தபோது கச்சைக்கொடி குளப்பகுதியில் இருந்து உதவிக்குவந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தனர். இம்மோதலில் புலிகள் தரப்பில் ஒருவர் வீரச்சாவு எய்தினார்.

இத்தாக்குதல் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணியளவில் வவுனியா - மாமடு என்னும் இடத்தில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் மூன்று காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மின்னல்வேகத்தாக்குதல் ஒன்றை நடாத்தினர். இத்தாக்குதல் ஐந்து நிமிடங்கள் மட்டுமே நீடித்தது.

இதேவேளை இத்தாக்குதல் இடம்பெற்ற இடத்திற்கு கச்சைக்கொடிக்குளப் பகுதியில் இருந்து உதவிக்கு விரைந்த இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமடக்கித் தாக்கினர். இம்மோதலிலும் இராணுவத்தினருக்குப்பலத்த சேதம் ஏற்பட்டதாயினும் விபரம் தெரியவரவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவு எய்தினார்.

காவலரண்கள் மீதான தாக்குதலின்போது பல நவீன ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். அவற்றின் (4 ஆம் பக்கம் பார்க்க)

### காரைநகர் மீட்புநிதி திரட்ட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வதிவோரிடமிருந்து நாளை சனிக்கிழமை 30 ஆம் திகதி காலை 9.00 மணிக்கும், 11.00 மணிக்கும் இடையில் வட்டுக்கோட்டைப் பகுதியில் மீட்புநிதி [4 ஆம் பக்கம் பார்க்க]

**இலவசஇணைப்பு**

1982 தொடக்கம் மண்மீட்புக்காய்உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்படவில்லை.

## முதலில் 3000 அகதிகள் திருமலை வருவர்

(கொழும்பு)

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது தொடர்பாக, சிறிலங்கா இந்திய அதிகாரிகளுக்கிடையே பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடைபெறுவதாக நேற்று கொழும்பில் நடந்த செய்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவருக்கு மண்ணெய் வழங்குமாறு கோரிக்கை

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு மண்ணெணணெய் வழங்க வழிவகை செய்யுமாறு பெற்றோரும், பாட [4 ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்ட 40பேர் திங்கள் விடுதலை

## அகதி முகாம்மீது குண்டுவீச்சு; நாவலடியில் ஒருவர் பலி

-மாமடு என்னும் இடத்தில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் மூன்று காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மின்னல்வேகத் தாக்குதல் ஒன்றை நடாத்தினர். இத்தாக்குதல் ஐந்து நிமிடங்கள் மட்டுமே நீடித்தது.

இத்தாக்குதலின்போது பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களையும் தூக்கிக்கொண்டு ஏனையவர்கள் ஓடிவிட்டனர். இத்தாக்குதலில் இராணுவத்தினரின் காவலரண்கள் மூன்று முற்றாக அழிக்கப்பட்டன.

இருந்த ... இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமடக்கித் தாக்கினர். இம்மோதலிலும் ... தலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவு எய்தினார்.

காவலரண்கள் மீதான தாக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மாணவர்களுக்கு மனிவென...

[4 ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்ட 40பேர் திங்கள் விடுதலை

பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நாற்பது பேர் எதிர்வரும் திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட செயலகத்தில் விடுதலை செய்யப்படவுள்ளனர். இவர்களின் பெயர் விபரம் வருமாறு.

பாலசிங்கம் ரஞ்சன் [நாவற்குழி மேற்கு, தச்சன்தோப்பு] மார்டின் விக்ரர் மதுரநாயகம் [15, கடற்கரைவீதி, ஈச்சமோட்டை], செல்லையா செல்வராசா [அல்லாரை தெற்கு, மீசாலை], இராமேஸ்வரன் திருநாகரன் நுணாவில் மேற்கு, சாவகச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அகதி முகாம்மீது குண்டுவீச்சு; நாவலடியில் ஒருவர் பலி

## புலிகள் பதிலடி; விமானம் திரும்பியது

(யாழ்ப்பாணம்)

அரியாலை அகதி முகாம் பகுதியில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலினால் ஒருவர் பலியானார். இருவர் காயமடைந்தனர். புலிகளின் பதிலடித் தாக்குதலைத் தொடர்ந்து விமானம் திரும்பிச் சென்றது.

நேற்றுமாலைஐந்துமணியளவில் அரியாலைப்பகுதியைவட்டமிட்டசிறிலங்காகுண்டுவீச்சு விமானங்கள் இரண்டு நாவலடி பகுதியில் உள்ள அகதி முகாம் அருகில் வீசிய குண்டு ஒன்றினால் அம் முகாமில் தங்கியுள்ள காரைநகரைச் சேர்ந்த இருபது வயது இளைஞர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். இருவர் காயமடைந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கோபாலசாமியை பதவிவிலக தி. மு. க. கோரிக்கை?

(சென்னை)

திராவிட முன்னேற்றக்கழக பாராளுமன்ற உறுப்பினர் கோபாலசாமியை பதவிவிலகுமாறு தி. மு. க. தலைமைப்பீடம் கோரிக்கை விடுக்கும் என கொழும்பில் வெளியாகும் 'தினகரன்' செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளுடனான உறவுகளை துண்டிக்கும் நடவடிக்கைகளில் ஒரு அம்சமாக இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி, பத்மநாபா படுகொலை வழக்குகளில்

( 3ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் பௌத்தகொடி ஏற்றுக

### சு. க. எம். பி

(கொழும்பு)

"அடுத்த வெசாக் போயா தினத்தில் பாராளுமன்றக் கட்டடத்தில் பௌத்தகொடியை ஏற்ற வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால் நான் அக் கொடியை ஏற்றிவைப்பேன்"

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விஜேமுனி சொய்ஸா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கடந்த வெசாக் போயா தினத்தில் பௌத்தகொடியை

( 3ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் தொடர்ந்து விமானக் குண்டு வீச்சு

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் தொடர்ந்தும் குண்டுவீச்சுத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்றுமுன்தினமும், மணலாற்றுப் பகுதியிலுள்ள செம்மலை, அளம்பில், நாயாறு கிராமங்களின் மீது விமானப்படையின் அவ்ரோ விமானம் மிகப்பாரிய குண்டுகளை வீசியுள்ளது. இக்குண்டு வீச்சுகளின் போது பொதுமக்களின் வீடுகள் பல சேதமடைந்துள்ளன.

## குடியிருப்புகள் மீது விமானக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

பளைப் பகுதியில் சிறிலங்கா விமானங்கள் இரண்டு குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. நேற்றுக் காலை எட்டு மணியளவில் பளைப்பகுதியை வட்டமிட்ட இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் குடியிருப்புக்கள் மீது ஐந்து குண்டுகளை வீசின.

மேற்படி தாக்குதலினால் உயிர்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரிய வருகிறது.

(ச)

# அதிகாரம் உங்களிடம் இல்லை; நிர்வாகத்தை குழப்பாதீர்கள்!

## கல்விப்பணிப்பாளருக்கு மாகாண அமைச்சு அறிவிப்பு

கடமையிலிருந்து இளைப்பாறுவதற்குச் சொற்ப மாதங்கள் இருக்கும் நீங்கள் அவசரப்பட்ட முடிவுகளைக் கலந்து நிர்வாகத்தில் ஒழுங்கீனத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று உறுதியான புத்திமதியை உங்களுக்கு கூறவிரும்புகிறேன். மேலும் நியமனங்களையும் மற்றும் பதவி உயர்வுகளையும் செய்யும்போது திறமையையும் மூப்பையும் மாத்திரம்தான் கருத்திற் கொள்ள வேண்டும் வேறு பரிவுகளைக் கருத்திற் கொள்ளுதல் கூடாது.

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தரமுள்ள ஒருவர் கொத்தணி அதிபராகக்கடமையாற்றும் போது மற்றொருவரை அந்த இடத்திற்கு நியமனம் செய்ய வேறெந்த அளவுகோலும் இருக்க முடியாது. நிர்வாகத்தில் பிரச்சினைகள் உங்களால்தான் உண்டாக்கப்படுகின்றன. இந்த அமைச்சினால் அன்று; உங்களுக்கு அதிகாரம் வழங்கப்படாதவிடயங்களில் மாற்றங்களை மேற்கொள்வது உங்களது வழக்க

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### தீனன்

வவுனியா மாவட்டத்திலுள்ள மாமடு இராணுவக் காவலரண்கள் தகர்ப்பின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் தீனன் (வேலுப்பிள்ளை புஸ்பநாதன், மகிழடித்தீவு, மட்டக்களப்பு) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.

## புலிகளின் கோரிக்கை தெரிவுக்குழு பரிசீலனையில்

சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டுமேயானால் யாழ்ப்பாணக் குடாநாட்டின்மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையையும் இராணுவ நடவடிக்கைகளையும்விலக்கிக்கொள்ள வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வைத்திருக்கும் நிபந்தனை ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

இப்பிரச்சினை குறித்து ஆராய சிறிலங்கா அரசினால் நியமிக்கப்பட்டிருக்கும் மங்கள முனசிங்கா தலைமையிலான

[4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் தேவை

யாழ் நகரிலுள்ள கலைக்கல்லூரி ஒன்றுக்கு வாணிப பாட்டு பயிற்றுவிக்கக்கூடிய ஆசிரியர் தேவை.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் 15-12-1991 க்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பவும்.

விளம்பர இல. 128,
மே/பா ஈழநாதம்,
யாழ்ப்பாணம்.

(B/3541)

## தவறிவிட்டது

42 - 6119 இலக்க அசோக் லேலண்ட் லொறியின் (Spire wheel) 1000 - 20 அளவுடைய ரயருடன் கூடிய ரிம் மும் கண்டாவளைக்கும், புளியம்பொக்கணைக்கும் இடையில் தவறி விழுந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் தரப்படும்.

வி. எஸ். பாலச்சந்திரன்
266 A பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

[R/1957]

## மெல்லிசைப் பாடகர்கள், பாடகிகள் வருக!

எம்மால் புதிதாக உருவாக்கப்பட விருக்கும் புதிய பாடல் ஒலிப்பதிவில் பாடக்கூடிய திறமையுள்ள பாடகர்கள், பாடகிகள் எதிர்வரும் 07-12-91 சனிக் கிழமை காலை 10-00 மணிக்கு கோண் டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத் தலைமைச் செயலகத்துக்கு வருகை தரும்படி அன் புடன் அழைக்கப்படுகின்றனர்.

பொறுப்பாளர்
விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்,
தலைமைச் செயலகம்,
தமிழீழம்.

(R/1963)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

25.11.91 காலை 10 மணியளவில் நந்தினி புண்ணியமூர்த்தி (சரவணை கிழக்கு வேலணை) என்பவரது அடையாள அட்டையும் மணிப்பர்சும் (கொக்குவில் - யாழ்ப்பாணம் இடையில்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(R/1959)

## டென்மார்க்கிலும் எதிர்ப்பு

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளில் அகதிஅந்தஸ்துக் கோரியுள்ள அந்நியருக்கு எதிராக அதிகரித்துவரும் தாக்குதல் சம்பவங்கள் டென்மார்க்கிற்கும் பரவியிருப்பதாக தெரிய வருகின்றது.

டென்மார்க்கிலுள்ள அகதிகளின் குழந்தைகளைப் பராமரிக்கும் நிலையமொன்றின்முன் புகுந்த டென்மார்க் இளைஞர்கள் உடனடியாக அகதிகள் வெளியேற வேண்டுமென்று கோஷமிட்டனர்.

## தமிழரிடம் கொள்ளை கொழும்பில் அதிகரிப்பு

கொழும்பில் தமிழ் மக்களிடம் கொள்ளையடிப்பது, வழிப்பறி செய்வது ஆகியன அதிகரித்துள்ளன. கொள்ளையர்கள் உளவுப் பிரிவினர், பொலிஸார், இராணுவத்தினர் போன்று பாவனைசெய்து செயல்பட்டு வருகின்றனர். போலியான அடையாள அட்டைகளையும் இவர்கள் தம்வசம் வைத்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புகோட்டை, புறக்கோட்டை வட்டாரத்திலேயே கள்ளக் கோஷ்டிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன், அதிகாலையில் ஸ்ரேசனிலிருந்து வண்டிகளைப் பிடிக்கச் செல்லும் பயணிகளே பெரும்பாலும் இவர்களிடம் மாட்டிக் கொள்வதாகவும் தெரிய வருகின்றது.

## கொள்கை அளவில் இஸ்ரேல் இணக்கமாம்

(டெல்அவிவ்)

மத்திய கிழக்கு சமாதான மாநாட்டு அடுத்த மாதம் வாசிங்டனில் நடைபெறும் போது தானும் பங்கு பற்றக் கொள்கையளவில் இணக்கம் தெரிவிப்பதாக நேற்று முன் தினம் இஸ்ரேல் அறிவித்துள்ளது. டிசம்பர் 9 ஆம் திகதிக்கு பின்னர் மாநாட்டை நடத்த இஸ்ரேல் விருப்பம் தெரிவித்துள்ளது. இம் மாநாட்டில் பங்குபற்றுவதென ஜோர்டானும் சிரியாவும் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் ஏற்கனவே அறிவித்திருப்பது தெரிந்ததே.

## பொருள்களின் விலைகளை வர்த்தகர் சங்கம் குறைப்பு

(சாவகச்சேரி)

அத்தியாவசியப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலையை தென்மராட்சி வர்த்தக சங்கத்தினர் மேலும் தளர்த்தியுள்ளார்கள்.

இதன்படி கிலோ ஒன்றிற்கு சீனி 84 ரூபாவாகவும், மா 22 ரூபாவாகவும், அரிசி 29 ரூபாவாகவும், தேயிலை 110 ரூபாவாகவும் விற்கும்படி தென்மராட்சி வர்த்தக சங்கம் தமது எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு அறிவித்துள்ளது. (ரூ)

## பல்கலையில்

## யாழ் மத்திய கல்லூரி ஆண்டு 6 அனுமதி

மேற்படி அனுமதி கோருவதற்கான விண்ணப்பப் படிவங்களைத் தனியார் புத்தக நிலையங்களிற் பெற்று விண்ணப்பக் கட்டணமாக ரூபா 35/- கல்லூரி அலுவலகத்திற் செலுத்தி 16-12 91 திங்கட்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்கும்படி வேண்டப்படுகின்றனர். ஏற்கனவே விண்ணப்பப்படிவங்களை ஒப்படைத்தோர் உரிய கட்டணத்தைச் செலுத்தவும் பரீட்சைத்திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

அதிபர்,
யாழ் மத்திய கல்லூரி.

(B/3546)

## சுகாதார திணைக்கள அரசாங்க அறிவித்தல்

## பொது சுகாதார பரிசோதகர் பதவி கிளிநொச்சி

கிளிநொச்சிப்பகுதியில் மேற்படி பதவிக்கு இளைப்பாறிய பொது சுகாதார பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். மாதமொன்றுக்கு மொத்த வேதனமாக ரூ 3500/- வழங்கப்படும். தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் 2-12-91 காலை 9-00 மணிக்கு விண்ணப்ப சான்றிதழ்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு எனது பணிமனைக்கு சமுகம் அளிக்கவும்.

ந. சனகசபை
சு.சே.பி.பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(B-3542)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 11 - 29

1985 ஆம் ஆண்டு கிளிநொச்சி திருவையாற்றுப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

அசோக் (சின்னத்தம்பி மேன்சொலமன் இன்பராசா - கெருடாவில், சாவகச்சேரி)

பொறுப்பாளர்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்,

தலைமைச் செயலகம்,

(R/1963) தமிழீழம்.


(சாவகச்சேரி)

அத்தியாவசியப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலையை தென்மராட்சி வர்த்தக சங்கத்தினர் மேலும் தளர்த்தியுள்ளார்கள். இதன்படி கிலோ ஒன்றிற்கு சீனி 34 ரூபாவாகவும், மா 22 ரூபாவாகவும், தேயிலை 110 ரூபாவாகவும் விற்கும்படி தென்மராட்சி வர்த்தக சங்கம் தமது அங்கத்தவர்களுக்கும் வர்த்தக நிலையங்களுக்கும் அறிவித்துள்ளது. (மு)

## பல்கலையில் மண்ணெண்ணை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக அனைத்துப் பீட மாணவர்களுக்கும் இன்று (29. 11. 91) மண்ணெண்ணை வழங்கப்படும் என யாழ். பல்கலைக் கழக மாணவரவை அறிவித்துள்ளது.


## G. C. E. O/L முன்மாதிரிப் பயிற்சிப் பரீட்சையும் இலவச கருத்தரங்கும்

| திகதி | பரீட்சை மு. ப. 8-00 | பரீட்சை பி. ப. 1-00 | இலவச கருத்தரங்கு பி. ப. 4-00 | இலவச கருத்தரங்கு பி. ப. 5-00 |
|---|---|---|---|---|
| 02-12-91 திங்கள் | தமிழ் மொழியும் இலக்கியமும் I, II&III | ஆங்கிலம் I&II | தமிழ் | ஆங்கிலம் |
| 03-12-91 செவ்வாய் | கணிதம் I&II | சமயம் I&II (இந்து/றோ. க.) | கணிதம் | சமயம் |
| 04-12-91 புதன் | விஞ்ஞானம் I&II | சமூகக்கல்வி I&II | விஞ்ஞானம் | சமூகக்கல்வி |
| 07-12-91 சனி | சித்திரம்/நடனம்/சங்கீதம் I, II&III I&II | வர்த்தகமும் கணக்கீடும்/விவசாயம்/மனைப்பொருளியல் I&II | வர்த்தகம்/விவசாயம் | |

★ விடைத்தாள்கள் திருத்தப்பட்டு, புள்ளிகளுடன் 08-12-91 இல் வழங்கப்படும்.
★ அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகளுக்கான சான்றிதழ் வழங்கப்படும்.
★ பரீட்சைக்குத் தோற்ற வசதியில்லாதவர்களும் கருத்தரங்கில் இலவசமாக பங்கு பற்றலாம்.
★ தென்மராட்சி: Brilliant கல்வி நிறுவனம், சங்கத்தானை, சாவகச்சேரி;
வடமராட்சி: Maths Centre, நெல்லியடி, கரவெட்டி

ஆகிய நிறுவனங்களிலும் இப் பரீட்சைகள் நடைபெறும்

மேலதிக விபரங்களுக்கு,

BOND புத்தக நிறுவனம்,

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(B/3544)



## அறிவித்தல்

நாவற்குழி குடியேற்றத் திட்ட முகாமில் அமைந்துள்ள மேஜர் சுரேந்திரன் சனசமூக நிலையத்தின் வளர்ச்சி நிதிக்காக 27-11-91 அன்று குலுக்கப்பட இருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. சீட்டிழுப்பு நடாத்தப்படும் தினம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

ஆ. பெர்னாண்டோ
செயலாளர்

அ. திருநாவுக்கரசு
தலைவர்,
மேஜர் சுரேந்திரன்
சனசமூக நிலையம்
குடியேற்றத்திட்ட
முகாம், நாவற்குழி.

(R/1964)



1985 ஆம் ஆண்டு கிளிநொச்சி திருவையாற்றுப் பகுதியில் சிறிலங்கா படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

அசோக் (சௌரட்ணம் மேன்சொலமன் இலங்கைராசன் - கெருடாவில், சாவகச்சேரி)

1987 ஆம் ஆண்டு தமிழகம் வேதாரணியப் பகுதியில் இந்திய சுங்கத்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவு எய்திய

றோகன் (தங்கவடிவேல் மணிவண்ணன் - காட்டுவளவு, வல்வெட்டித்துறை)

சண்டிலிப்பாயில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவு எய்திய

குலம் (மார்க்கண்டு விந்தியானந்தம் - வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி)

யாழ்ப்பாணம் டேவிற் வீதியில் இந்தியப் படையினருடனான மோதலின் போது காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்திய

சங்கர் (தேவதாஸ் இஸ்லி புவனேந்திரன் - 2/20 மஞ்சத்தடி வீதி, சுண்டுக்குழி)

1988 ஆம் ஆண்டு இணுவில் மருத்துவ மனைக்கு முன்பாக தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது தீவிர ஆதரவாளரான இளம் பெண்

1989 ஆம் ஆண்டு கோப்பாய் இராசபாதையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்திய

2ஆம் லெப். ரட்ணா (தம்பிநாயகம் காந்தரூபன் - 8/1, ரட்ணா வீதி, யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டு பளையில் சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதலால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/3543)

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

சிந்தனைக்கு

பலமுள்ளவர்க்குள்ள உரிமைகளை எல்லாம் பலமில்லாதவர்களும் பெறவேண்டும். அது தான் உண்மையான ஜனநாயகம்.

— "மலர் மணத்திலிருந்து"

ஈழநாதம்

மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 29-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# ஒற்றையாட்சிதான் ஜனநாயகமா?

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதில் எந்தவிதப் பயனும் இல்லை. அவர்கள் துப்பாக்கியில் மட்டும் நம்பிக்கை வைத்து ஜனநாயக வழிக்கு வர மறுக்கும்வரை நூற்றாண்டுகாலம் பேச்சு நடத்தினாலும் எந்தப் பயனும் ஏற்பட்டு விடப் போவதில்லை. இவ்வாறு சிறிலங்காவின் பிரதமரும், நிதி அமைச்சரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா நேற்று முன்தினம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீடு விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்:

விடுதலைப்புலிகள் ஜனநாயக வழிக்கு வர மறுக்கின்றார்கள் என்பது சிறிலங்கா அரச தரப்பு தொடர்ந்து தெரிவித்து வரும் குற்றச் சாட்டாகும், அவ்வாறானால் சிறிலங்கா அரச தரப்பு தெரிவித்து வரும் ஜனநாயக வழி என்றால் என்ன?

இலங்கையில் இருந்து ஆங்கிலேயர் வெளியேறியதில் இருந்து உருவாக்கப்பட்ட பெரும்பான்மையினர் கையில் ஆட்சி அதிகாரம் சென்றடையக் கூடியதாகவுள்ள ஆட்சி அமைப்பு முறையையே சிங்கள அரசியல்வாதிகளும், சிறிலங்கா அரசாங்கமும் ஜனநாயக ஆட்சி முறை என்கின்றார்கள். இந்த ஒற்றை ஆட்சி முறை உலகின் எப்பகுதியிலும் பல்தேசிய இனங்கள் வாழும் ஓர் நாட்டில் அல்லது பிரதேசத்தில் சீரான ஆட்சியை அமைத்துவைக்க உதவியது கிடையாது: அந்தநாடுகளில் உள்ள சிறுபான்மையினரின் ஜனநாயக உரிமைகளைப் பேணியதும் கிடையாது.

இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட இந்த ஒற்றை ஆட்சி ஜனநாயக முறையே கடந்த நாற்பது வருடங்களாக இலங்கைத் தமிழரின் உரிமைகளைப் பறிக்க ஏதுவாக இருந்தது: தனிச் சிங்கள மொழிச் சட்டத்தில் இருந்து படிப்படியாக வேறு பல சட்டங்களின் மூலமும், அரசியல் அமைப்பு திருத்தச்சட்டங்கள் மூலமும் தமிழரின் உரிமைகளை இந்த ஒற்றையாட்சி அமைப்பு ஜனநாயகமே பறித்தது. அதன் விளைவாகவே ஆயுதப் போராட்டம் உருவாகியது. அதாவது தேசிய சிறுபான்மை இனங்களின் உரிமைகளை இந்த ஒற்றையாட்சி ஜனநாயக முறை தீர்க்கத் தவறியமையினாலேயே போராட்டம் வலுவடைந்தது.

இந்த நிலையில் மீண்டும் அதே ஒற்றையாட்சி அமைப்பினுள் புலிகளையும், தமிழ் மக்களையும் வருமாறு கோருவது எந்த வகையில் நியாயமானது? பொருத்தமானது? ஜனநாயக அமைப்பு ஆட்சி முறை என்பது தனியாக ஒற்றை ஆட்சி அமைப்பு முறை மட்டும் தானா?

ஜனநாயக அமைப்பு முறை என்பது உலகின் பல வடிவங்களில் இன்று உள்ளது. சிறிலங்காவில் நிலவும் இறுக்கமான ஒற்றை ஆட்சி முறையில் இருந்து கனடா, சுவிற்சலாந்து போன்ற நாடுகளில் நிலவும் உயர் சமஷ்டி அமைப்புக்கள் வரையிலும் நிலவுவது ஜனநாயக அமைப்பு முறையே. ஒற்றையாட்சி அமைப்பு முறையில் நாட்டில் அல்லது பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாமையினாலேயே சமஷ்டி அமைப்பு முறைகள் உருவாகின. உலகின் உயர்வான சமஷ்டி அமைப்பு முறைகள் நிலவும் நாடுகளிலேயே இன்று தேசிய இனங்களின் பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. அந்த நெருக்கடிகளுக்கு தீர்வு காண அந்த நாடுகள் முயற்சியிலும் இறங்கியுள்ளன.

இந்தநிலையில், ஜனநாயக அமைப்பு முறை என்றால் பெரும்பான்மைஇனத்தின்நலனையே முற்றுமுழுதாகப் பேணும் ஒற்றைஆட்சி முறைதான் என எண்ணிக் கொண்டு, பல்தேசிய இனங்கள் வாழும் நாட்டில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது எப்பொழுதும் சாத்தியப்படப் போவதில்லை. இது விடுதலைப் புலிகள் துப்பாக்கிகளை வைத்திருப்பதால் நிகழும் விடயமல்ல. சிங்களப் பேரினவாதம் தனது போக்கை மாற்றிக் கொள்ள விரும்பாமையினால் ஏற்பட்ட விடயமாகும்; இது எத்தனை ஆண்டுகள் சென்றாலும் இதேநிலையில் தீராது சிங்களப் பேரினவாதம் எப்பொழுது தனது கொள்கையை மாற்றி, தமிழ் மக்களும் ஒரு தேசிய இனம், ஒற்றை ஆட்சிக்கு அப்பாலும் ஜனநாயக அமைப்பு முறைகள் உள்ளன என்பதை சிந்திக்க ஆரம்பிக்கின்றதோ அப்பொழுதே பேச்சுவார்த்தைகள், சமாதானம் என்பன ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும்.

# பட்டதாரி முகாமைத்துவ பயிலுனர் பதவிகள் ரத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண சபையினரால் பட்டதாரி முகாமைத்துவ பயிலுனர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சமார் 850 பேர்களது பதவிகள் ரத்துச்செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

மேலும் இதுபற்றித் தெரிய வருவதாவது,

இந்நிர்வாக சேவையில் நியமிக்கப்பட்டுள்ள மேற்படி பயிலுனர்களுக்கு வட - கிழக்கு மாகாண சபையால் அனுப்பப்பட்ட கடிதத்தில் "பயிற்சிப் பட்டதாரி ஆசிரியராக தெரிவு செய்யப்பட்டால் நிரந்தர நியமனம் பெறுவது எளிது என்று அபிப்பிராயப்படுவதாலும் பட்டதாரி பயிலுனர்களின் சேவை மாதாந்தப்படி 1992 மார்ச் மாதத்துடன் இடைநிறுத்தப் படவுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பட்டதாரிப் பயிலுனர்கள் மனக்கிலேசமடைந்த நிலையில் நியமனத்தின் போது தமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு ஏற்ப தமது பதவிகள் நிரந்தரமாக வழங்கப்படாமல் பறிபோய்விடுமோ என அங்கலாய்த்தவண்ணம் உள்ளனர்.

இதேவேளை பட்டதாரி பயிலுனர் ஆசிரிய சேவையிலுள்ளோரின் நியமனங்கள் யாவும் நிரந்தரமாக்கும் நடவடிக்கையில் வட - கிழக்கு மாகாண சபை விபரங்கள் சேகரிப்பதும் ஏற்கனவே யாவரும் அறிந்ததே.

## ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை!

## புதிய பாடங்களுக்கான பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளில் சில புதிய பாடங்களுக்கான பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

ஆங்கிலம், வர்த்தகம் ஆகிய பாடநெறிகள் பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையிலும் கணித பாடம் கோப்பாய் ஆசிரியப்பயிற்சிக்கலாசாலையிலும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. அதேவேளை 92/93ஆம் ஆண்டுக்கான மேற்படி கலாசாலைக்கல்வி ஆண்டுகளுக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப் பட்டிருக்கின்றது. (ஃ)

ஆரம்ப பாடசாலை

## ஆசிரியர் நியமனத்திற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கான நியமனங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்விச்சேவை ஆணைக்குழு அதிகாரி க. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விபரங்கள் 22-11-91 அன்று வெளியான வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த. உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்த 18-35 வயதிற்குட்பட்டவர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாமென்றும், வடபகுதியிலுள்ள அத்தகைமையுடையோர் வர்த்தமானி கிடைக்கும்வரை காத்திராமல் இப்போதே அவ்வப் பகுதி கல்விப்பணிப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இது தொடர்பாக கல்விப் பணிப்பாளருக்கு மேற்படி வர்த்தமானிப் பிரதிகள் அனுப்பிவைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## சுகாதாரக் குழு கருத்தரங்கு

யாழ் மாநகராட்சி மன்றத்தின் 23 வட்டாரங்களிலும் உருவாக்கப்பட்ட சுகாதாரக் குழுக்களின் தலைவர், செயலாளர்களுடனான கலந்துரையாடல் இன்று 29-11-91 காலை 9.00மணிக்கு யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

ஆணையாளர் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கில் சுகாதார சம்பந்தமான நடவடிக்கைகளில் சுகாதாரக் குழுக்களின் பங்கு, உள்ளூர் சுகாதாரப்பிரச்சினைகளும், தீர்வு காணும் வழிமுறைகளும் என்னும் விடயங்கள் பற்றிக் கருத்துரைகள் இடம் பெறவுள்ளன.

பாராளுமன்றத்தில்

ஏற்றுமாறு நான் கோரினேன். ஆனால் சபாநாயகர் எனக்கு அனுப்பிய பதிலில் பொதுநிர்வாக அமைச்சின் கணிப்பின் பேரிலேயே இப்படி கொடிகள் ஏற்றப்படுவதாகவும், பாராளுமன்றக் கட்டடத்தில் கொடியையேற்ற பணிப்புரை வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

பௌத்த தர்மம் மதிக்கப்படவேண்டுமெனக் குறிப்பிட்ட விஜேமுனி அதைகரிப்பது போதாது. பௌத்த கொடியும் ஏற்றப்படவேண்டும். அடுத்த செசன் தினத்திலாவது பௌத்தகொடி ஏற்றப்படவேண்டும். இல்லையேல் நான் ஏற்றிவைப்பேன் எனத் தெரிவித்தார்.

கோபாலசாமியை

விடுதலைப்புலிகளுடன் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சாட்டி கட்சி அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டமை குறித்து தி.மு.க. தலைமைப்பீடம் கவலை கொண்டுள்ளது.

இந்தக் குற்றச் சாட்டும், கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டமையும் தி.மு.க. தடைசெய்யப்பட வேண்டிய கோரிக்கையை நியாயப்படுத்திவிடலாம் எனவும் நம்பப்படுகிறது.

இந்தச் சங்கடமான நிலையிலிருந்து தப்புவதற்கான வழிவகைகளை தி.மு.க. தேடியே கோபாலசாமியை பதவிவிலகுமாறு கோரியுள்ளதாகவும் தினகரன்செய்திவெளியிட்டுள்ளது.

அதிகாரம்

மாகிவிட்டது அப்படிச் செய்த பிறகும் உங்கள் நடவடிக்கைகளுக்கு மேலாக இந்த அமைச்சு பிறப்பிக்கும் அறிவுறுத்தல்களையும் நீங்கள் தட்டிக் கழிக்கிறீர்கள் என்றும்.

கொத்தணி அதிபர்களை நியமிக்கும்விடயத்தில்தெளிவு ஏற்படுத்துவதற்கு அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான யாப்பின் 13ஆம் திருத்தத்தை படிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் என்று வட - கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர் யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் இடமாற்றம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் காரணமாகவே மேற்படி கடிதங்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை 26-06-90இல் பதில் அதிபர்களாக இருந்தவர்களை மாற்றம் செய்ய வேண்டாம் என்ற மத்திய கல்வி அமைச்சின் பணிப்புரையை உதாசீனம் செய்து யாழ்ப்பாணத்தில் கல்விப் பணிப்பாளர் மேற்கொண்ட சில இடமாற்றங்கள் புதிய பிரச்சினைகளை தோற்றுவிக்கலாம் என்று யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தடுத்து

பிள்ளை விக்கினேஸ்வரன் [சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை) பழனிவேல் மாறன் [நாகர்கோவில் வடக்கு. நாகர்கோவில்]

செல்லத்துரை சிவனேசகுமார் (77, பாரதி வீதி, கண்டுக்குளி யாழ்ப்பாணம்), ராசன் மனோகரன்(மிருசுவில் வடக்கு மிருசுவில் செபஸ்தியான் யூராஜ் (சி.சி. பாடசாலை, புதுக்குடியிருப்பு), தம்பிராசா சுதாகரன் (பொபி இண்டஸ்ரீஸ், சாவகச்சேரி), ராமன் பிச்சை ராஜேந்திரன் (கண்ணபுரம், உவர்மலை, திருமலை), சுசீலன் ரமேஷ்குமார் (அச்சாய் வீதி, மீசாலை தெற்கு), நிரஞ்சன் (கோவில் சந்தை, வாய்க்கால் கரவெட்டி) கணபதி செல்வராசா (நாகதாதன் வீதி, அச்சாய் றோட். கொடிகாமம்), மார்க்கண்டு குமார் (வெரியபுலோ சுழிபுரம் மேற்கு), சுப்பையா தர்மலிங்கம் (மட்டுவில் தெற்கு,வேலம்கேணி சாவகச்சேரி), சந்திரையா நவரத்தினம் (வேதவடையார் வளவு, மல்லாகம்), பாலசுப்பிரமணியம் சிறிரஞ்சன் (81, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்), சின்னப்பு அருமைத்துரை (நியூ டேவிட் லேன், இணுவில்), சிவலிங்கம் ஞானவேல் (371, அரசடிச் சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம்).

ஜேசுதாசன் ரவிச்சந்திரன் (ராஜ்சமரிக்ரோர்ஸ், கண்டி வீதி, கிளிநொச்சி), சரவணமுத்து சசிக்குமார் (56, 3-ம் பகுதி, திருவையாறு, கிளிநொச்சி), சண்முகம் சிவகுமார் (கமரிக்குடா, காஞ்சிபுரம், பரந்தன்), இரட்ணசிங்கம் தேவகுமார் (குரு இல்லம், உடுவில், சுன்னாகம்), வேலன் மகான் [மட்டுவில் தெற்கு. சாவகச்சேரி]. நடராசா குலேந்திரன் [மல்லி போடை, கல்வெட்டி, வல்வெட்டித்துறை]. அன்ரனி தேவதாஸ் [44, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்], ஆசீர்வாதம் அந்தோனி யோகராசா [முடக்காடு, அல்வாய் தெற்கு, அல்வாய்]. ஐயாசாமி சண்முகவேல் [இரத்தக்கட்டை வீதி. அல்வெட்டி தெற்கு], மயிலன் சிவகுருநாதன்[கைதடிமத்தி கைதடி], அருணாசலம் சிவகுமார் [அச்சாய் தெற்கு, கொடிகாமம்], கிருஷ்ணதாஸ் பயூரன் [சந்தி றோடை, சுன்னாகம்], அன்புவழிபுரம் திருமலை. முத்தையா யோகராசா [எல். வி. அகதிமுகாம் முத்தையன்கட்டு], உப்புவெளி, திருமலை,

## க. பொ. த. (சா. த.) பரீட்சை

# அடையாள அட்டை புதிய ஏற்பாடுகள்

[யாழ்ப்பாணம்]

அடுத்த மாதம் நடைபெற இருக்கும் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் அடையாள அட்டைகள் இல்லாத மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது.

அடையாள அட்டைக்காக விண்ணப்பித்த தமது பற்றுச்சீட்டை சமர்ப்பித்து தமது புகைப்படம் ஒன்றில் உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்பம் பெற்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்து பரீட்சைகளை எழுத முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (க)

அகதி

தனர்.

இதனை அடுத்து பூம்புகார் பகுதியிலும் மணியம் தோட்டப் பகுதியிலுமாக இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. இதனால் இப்பகுதிகளில் இருந்த சில வீடுகள் சேதமடைந்தன.

இவ் விமானத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அவ்விடத்திற்கு விரைந்து வந்த விடுதலைப் புலிகள் குண்டு வீச்சு விமானங்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர். புலிகளின் தாக்குதல் ஆரம்பமானதை தொடர்ந்து விமானங்கள் இரண்டும் தாக்குதலை நிறுத்தி விட்டு மேலெழுந்து சென்றன (ச)

மாணவருக்கு

சாலை அபிவிருத்திச் சபைகள் உறுப்பினர்களும் அரசாங்க அதிபரையும், யாழ். கல்விப் பணிப்பாளரையும் கோரவுள்ளனர்.

மண்ணெண்ணெய் பற்றாக்குறையாகவுள்ளதால் பிள்ளைகள் அன்றாடம் இரவில் பரீட்சைக்கு ஆயத்தம் செய்ய முடியாத நிலையில் உள்ளதாக பெற்றோர் தரப்பில் சொல்லப்படுகிறது. பரீட்சார்த்திகளின் நன்மை கருதி ஒரு ஒழுங்குமுறைக்கமைய மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு க.பொ.த வகுப்புகள் உள்ள பாடசாலை அதிபர்களும் கல்விப் பணிப்பாளர் மூலமாக யாழ். அரசாங்க அதிபரைக் கேட்கவுள்ளனர்.

புலிகளின் கோரிக்கை

பாராளுமன்ற தெரிவுக் குழு புலிகளின் நிபந்தனைகளை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்று இந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

முதலில்

யாளர் மாநாட்டில் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் முதற் கட்டமாக மூவாயிரம் அகதிகள் திருக்கோணமலைக்கு அழைத்து வரப்படவுள்ளார்கள் என்றும், தமிழகத்திலுள்ள இருபத்திரண்டு அகதி முகாம்களில் சுமார் ஒன்றரை லட்சம் அகதிகள் தங்கியிருப்பதாகவும், தெரிவித்தார். அத்துடன் இலங்கை திரும்புவோரை திருக்கோணமலையிலும், மன்னாரிலும் குடியமர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது எனவும், இவர்களில் பெரும்பாலானோர் மீனவர்களும், விவசாயிகளும் ஆவர் எனவும், இவர்கள் மீளக் குடியமர்வதற்காக குடும்பமொன்றிற்கு தலா பதினேழாயிரம் ரூபா வீதம் அரசாங்கம் வழங்குமெனவும் குறிப்பிட்டார்.

## மரண அறிவித்தல்

### கந்தையா நடராசா

மீசாலை தெற்கு வீரசிங்க மகாவித்தியாலய முன்னாள் உப அதிபர் கந்தையா நடராசா காலமாகி விட்டார். அன்னார் திருமதி நல்லநாயகியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் சுரேஸன் (UK) கேதீசன் (இந்தியா) அவர்களின் அன்புத் தகப்பனாருமாவார். அன்னார் ஸ்ரீதேவி (U.K)யின் அன்பு மாமனாரும் பிரசாந்தி (U.K.)யின் பாட்டனாருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று காலை (29 - 11 - 91) 11:00 மணிக்கு மீசாலை தெற்கு 'லக்ஷ்மி வாசா' விலிருந்து தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

மீசாலை தெற்கு,
மீசாலை. (R/1965)

தகவல்:
திருமதி ந. நடராசா


## பதவி வெற்றிடம்

### தோட்டப் பராமரிப்பாளர்

பயன்தரு மரங்கள், அழகுத் தாவரங்கள் போன்றவற்றின் உற்பத்தியிலும் பராமரிப்பிலும் அனுபவமுள்ள தோட்டப் பராமரிப்பாளர் தேவை.

2.12.91 பி. ப. 3.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்

யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

[B-3545]


## மாணவர் சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஞான பண்டிதர் வித்தியாலய மாணவர்கள் அனைவரையும் இன்று நண்பகல் 1 மணிக்குள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் தென் பகுதி மண்டபத்திற்குச் சமுகமளிக்குமாறு கல்லூரியின் அதிபர் கேட்டுள்ளார். [ச]

## 26 பேர் தடுத்துவைப்பு

ராஜீவ்காந்தி, பத்மநாபா கொலைகளை ஒட்டி பயங்கரவாதம், அழிவு நடவடிக்கைகள் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் 26 பேர் தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தமிழக காவல்துறை தெரிவித்துள்ளது.

காரைநகர்

திரட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் செ. தமிழேந்தி தெரிவித்துள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த மீட்பு நிதி செலுத்த விரும்புவோர் இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

புலிகளின்

விபரம் வருமாறு:

★ 303 எல் எம். ஜி - 02
அதற்குரிய ரவைக்கூடு - 09
ரவைகள் - 700
★ மேலதிக சுடுகுழல் - 02
★ ஜி-3 துப்பாக்கி - 01
மகசீன் - 03
★ பி-81 ரக எல் எம். ஜி - 01
அதற்குரிய ரவைக்கூடு - 03
★ ரி-56-1 ரக துப்பாக்கி - 04
★ ரி-56-2 ரக துப்பாக்கி - 01
★ ரி-56 ரக துப்பாக்கி - 01
அதற்குரிய ரவைக்கூடு - 17
★ ஜே. ஆர் கைக்குண்டு - 05
★ ரி என். ரி ரக கைக்குண்டு - 01
★ 7.62 நடுத்தர ரவைகள் - 2650
★ நேட்டோ ரவைகள் - 97

தடுத்து

சேரி], ஜோன்பிள்ளை ஜேசுதாசன் [21/8, சென் மேரிஸ் வீதி, நாவாந்துறை] அழகையா மூர்த்தி [சிசி முகாம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு], நாராயணன் பாலசுப்பிரமணியம் [180, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்] நல்லையா நகுலேஸ்வரன் [மடு அகதி முகாம், மீன் மார்க்கற்], சிவஞானம் மோகன் [நடேஸ்வராக் கல்லூரி வீதி, காங்கேசன்துறை], திருநவுக்கரசு சிறிஸ்கந்தராசா ['ஜெயந்திபவனம்', அச்செழு, நீர்வேலி], வே. கிறஸ் ராஜன் [3ஆம் குறுக்குத்தெரு, மணிபந்தோட்டம் யாழ்.] கைலா

(3ஆம் பக்கம் பார்க்க

பட்டதாரிகளுக்குத்

போது 1500 ரூபாய் மாதாந்தம் வேதனமாக வழங்கப்படுமென்றும், இலங்கையில் மட்டுமன்றி வெளி நாடுகளிலும் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற பயிற்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும், ஆங்கிலமொழி கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் வேலையில்லாத 10,000 பட்டதாரிகளில் 2000 பேருக்கு அடுத்த வருட நடுப்பகுதியில் ஆசிரிய நியமனம் வழங்கவுள்ளதாகவும்,

மீதி 8000 பட்டதாரிகளுக்கு இந்த தொழிற்பயிற்சி மூலம் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தொழிலுக்காகக் காத்திருக்கும் பட்டதாரிகள் தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 27 ஆம் திகதிக்குமுன்னர் "பட்டதாரி பயிற்சித் திட்டப் பணிப்பாளர், கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு, செத்சிறிபாய, பத்தரமுல்ல" என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## பாக். யோசனையை இந்தியா நிராகரிப்பு

(டில்லி)

தென்னாசியாவை அணு ஆயுதங்களற்ற பிராந்தியமாக்குவது பற்றி ஐந்து நாடுகளின் மாநாடொன்றைக் கூட்ட வேண்டுமென பாகிஸ்தான் தெரிவித்த யோசனையை இந்தியா நிராகரித்து விட்டது. சர்வதேச அளவில் அணு ஆயுதங்கள் குவித்து வைக்கப்பட்டிருக்கும் போது ஒரு பிராந்தியத்தில் மட்டும் அதற்குத் தீர்வு காண முயல்வது பொருத்தமற்றது என இந்திய மக்களவையில் பேசிய இந்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வார்டோ பெலைரோ கூறியுள்ளார்.

## புலமைப் பரிசில் முடிவுகள் பொஸ்கோ 49, யாழ். இந். 48

(யாழ்ப்பாணம்)

ஆண்டு ஐந்துக்கான புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் பாடசாலைகளுக்கு நேற்று விநியோகிக்கப்பட்டன. இம்முடிவுகளின்படி சென்ஜோன் பொஸ்கோ பாடசாலையில் 49 மாணவர்களும், யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் 48 மாணவர்களும், யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் 28 மாணவர்களும் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இருந்து 19 மாணவர்களும் சித்தியடைந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச).(14)

## 600 பௌத்த பிக்குகள் மர்ம முறையில் மறைவு

(கொழும்பு)

இலங்கையில் 600க்கு மேற்பட்ட புத்த பிக்குகள் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளனர் இவர்கள் பற்றிய விபரம் எம்மிடம் உள்ளது என சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்,

அவர் தொடர்ந்து பேசுகையில் அரசியல் கட்சிகளை ஆதரித்த பல பௌத்த பிக்குமார் கொலை செய்யப்பட்டுள்ளனர். பிக்குமாரின் கௌரவம், மதிப்பு ஆகியன பாதிக்கப்பட்டுள்ளன. பிக்குமார் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்றும் சமரவீர குறிப்பிட்டார்.

## சலப்பையாற்றில் கிளைமோர் தாக்குதல்

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சலப்பையாற்றிற்கும் கும்புறுப்பிட்டிக்கும் இடையே சிறிலங்காப் படையினர்மீது விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலினால் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர். நேற்று முன்தினம் இத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா யோசேப் இளையதம்பி

பரியோவான் கல்லூரி முன்னாள் ஆசிரியரும் யாழ்ப்பாணக் கல்வி நிலைய ஸ்தாபகருமான செல்லப்பா யோசேப் இளையதம்பி (28-11-91) இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கிறேஸ் அற்புதமலரின் (இளைப்பாறிய ஆசிரியை பரியோவான் கல்லூரி) அன்புக் கணவரும் பத்மினிதேவி (ஆசிரியை நைஜீரியா) Dr சத்தியசீலன் (நைஜீரியா) Dr. ஜெயசீலன் (Medical Centre கண்டி) அற்புதனிதா, கிருபாமிர்தம் ஆகியோரின் பிரிய தந்தையும் எட்வின் (ஆசிரியர் நைஜீரியா, முன்னாள் ஆசிரியர் பரியோவான் கல்லூரி) ஆனந்தராணி (ஆசிரியை நைஜீரியா முன்னாள் ஆசிரியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) சந்திரா (Medical Centre கண்டி) Dr. சிவரத்தினம் (பாவற்குளம் வவுனியா) ஏணஸ்ற் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரபாகரன், சந்திரகாந், ஞானசரன் சத்தியஜித், அகில ஜித், அஜந்தன், அஞ்சனா, அனோஜனா, பிரியதர்சனி (பரியோவான் கல்லூரி) ஜீவர்சனி (உடுவில் மகளிர் கல்லூரி) தாமரி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) கிருஷாந் ஆகியோரின் பிரிய பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

"அற்புதமனை"
நவாலி தெற்கு,
மானிப்பாய் (R/1966)

தகவல்
பிள்ளைகள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.